வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – சரவணகுமார்

தேதி 08.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

18 ஆவது வெளிநாடு வாழ் இந்தியர் தின மாநாடு ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் இன்று தொடங்கி உள்ளது.

இந்தியாவின் பலதரப்பட்ட உணவு வகைகளை, உலக சந்தைக்கு உயர்த்த அதிக வாய்ப்புகள் இருப்பதாக, மத்திய உணவு பதப்படுத்தும் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

ஹிந்தி ஆட்சி மொழி பற்றிய நாடாளுமன்ற குழுவினர், ஆட்சி மொழி அமலாக்கம் குறித்து இன்று புதுச்சேரியில், மத்திய அரசு அலுவலகங்களின் அதிகாரிகளுடன் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினர்.

புதுச்சேரியில், சிறார்கள் வாகனம் ஓட்டினால் பெற்றோருக்கு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என, போக்குவரத்து காவல் துறை தெரிவித்துள்ளது.

வெளிநாடு வாழ் இந்தியர்1(15)

18 ஆவது வெளிநாடு வாழ் இந்தியர் தின மாநாடு ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் இன்று தொடங்கி உள்ளது. 75 நாடுகளில் இருந்து, வெளிநாடு வாழ் இந்தியர்கள் சுமார் 6 ஆயிரம் பேர் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

ஒடிசா மாநில அரசும், மத்திய இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த வெளிநாடு வாழ் இந்திய இளைஞர் தின நிகழ்ச்சி, இன்று, மாநாட்டின் தொடக்கமாக இடம் பெற்றது. மத்திய அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இந்நிகழ்ச்சியில் பேசுகையில், நீண்ட கால சவால்களை சமாளித்து, அனைவரையும் உள்ளடக்கிய, முற்போக்கான நவீன சமூகமாக மேம்படும் பாதையில் இந்தியா பயணித்து வருவதாக கூறினார். ஜனநாயக கட்டமைப்பிற்கு உட்பட்டு, தொழில்நுட்பம்-

பாரம்பரியம் ஆகிய இரண்டு தூண்கள் மீது, முன்னேறி வரும் உலகின் மிகப் பெரிய நாடு இந்தியா தான் என்று அவர் தெரிவித்தார். வளர்ச்சியின் வேகத்தை தூண்டுவதிலும், நாட்டின் இலக்குகளை முழுமையாக எட்டுவதிலும், இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வெளிநாடு வாழ் இந்தியர் 2 (7)

**வெளிநாடு வாழ் இந்தியர் தின** மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகளில், மத்திய அமைச்சர்கள் திரு பபித்ரா மார்கரிட்டா, டாக்டர் மன்சுக் மாண்டவியா, ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இந்தியாவிற்கும், உலகின் பல்வேறு நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கும் இடையிலான உறவுகளை கொண்டாடும் வகையிலான **வெளிநாடு வாழ் இந்தியர் தின விழாவை**, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முறைப்படி தொடங்கி வைக்கிறார்.......

வெளிநாடு வாழ் இந்தியர் 3(13)

இந்தியாவின் வளர்ச்சிக்கு வடிவம் கொடுப்பதிலும், உலக அளவில் இந்தியாவின் கவுரவத்தை உயர்த்துவதிலும் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்களிப்பை எடுத்துக் கூறும் வகையிலான பல்வேறு அம்சங்கள் வெளிநாடு வாழ் இந்தியர் தின விழாவில் இடம் பெறுகின்றன. இம்முறை வெளிநாடு வாழ் இந்தியர் தின விழாவில், டிரினிடாட் -டொபாக்கோ நாட்டின் அதிபர் திருமதி கிருஸ்டின் கங்காலு, மெய்நிகர் முறையில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, மாநாட்டிற்கு முன்னிலை வகிக்கிறார். வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள வெளிநாடு வாழ் இந்தியர் தின விழாவின் நிறைவு விழாவிற்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தலைமை ஏற்கிறார். பல்வேறு துறைகளில் சாதனை படைத்த வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு, “பிரவாசி பாரதிய சம்மான்” விருதுகளையும் குடியரசு தலைவர் வழங்கிச் சிறபிக்கிறார்.

ஒ□தேர்தல் (18)

ஒரே நாடு-ஒரே தேர்தல் உத்தேசம் பற்றிய 2 மசோதாக்கள் குறித்த கூட்டு நாடாளுமன்ற குழுவின் முதலாவது கூட்டம், புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. இவ்விரு மசோதாக்களுக்கும், 129 ஆவது அரசியல் சாசன திருத்த மசோதா, யூனியன் பிரதேசங்கள் சட்டத் திருத்த மசோதா என,

அதிகாரப்பூர்வமாக பெயர் சூட்டப்பட்டுள்ளது. கூட்டம் தொடங்கும் முன்பாக, கூட்டு நாடாளுமன்ற குழுவின் தலைவர் திரு பி.பி சௌத்ரி செய்தியாளர்களிடம் பேசுகையில், மசோதாக்கள் குறித்து சட்ட நிபுணர்கள், நீதித் துறை வல்லுனர்கள், அரசியல் கட்சிகள், சிவில் சமுகத்தினர் உட்பட அனைத்து தரப்பினரின் ஆலோசனைகளையும் பெற தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

இந்த 39 உறுப்பினர் குழுவில் மக்களவையில் இருந்து 27 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் இருந்து 12 உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். பாரதிய ஜனதாவை சேர்ந்த திரு அனுராக் தாக்கூர், திரு புருஷோத்தம் ருபாலா, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திருமதி பிரியங்கா காந்தி, திரு மனீஷ் திவாரி, மற்றும் திரிணாமுல் காங்கிரஸ், சரத்பவார் தேசியவாத காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம், ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் அடங்குவர். கூட்டு நாடாளுமன்ற குழுவின் அறிக்கை அடுத்த நாடாளுமன்ற கூட்டத் தொடரின், கடைசி வாரம் முதல் நாளில் சமர்பிக்கப்படும்.

*உணவு கண்காட்சி* 1 (15)

உற்பத்தி முதல், நுகர்வு வரையிலான வினியோகச் சங்கிலியில் பல்வேறு நிலைகளில் உள்ள அனைத்து வகை உணவுப் பொருட்களையும் உள்ளடக்கிய இண்டஸ் ஃபுட்-2025 கண்காட்சியை, மத்திய உணவு பதனீட்டுத் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் புதுடெல்லி அருகே கிரெட்டர் நொய்டாவில், இன்று தொடக்கி வைத்தார். பல தரப்பட்ட மக்களையும், பல தரப்பட்ட பூகோள அமைப்புகளையும் கொண்டுள்ள நாடான இந்தியாவின் உணவு வகைகளையும், இந்திய நறுமணப் பொருட்களையும், உலக சந்தைக்கு உயர்த்த அதிக வாய்ப்புகள் இருப்பதாக அவர் கூறினார்.

நாட்டில், சாதாரண மக்களின் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவை இருப்பதால் சமையல் கலைஞர்களும், துறை சார்ந்த அதிகாரிகளும் உணவின் தரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்தல் அவசியம் என்று அமைச்சர் வலியுறுத்தினார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் 100 புதிய உணவு பரிசோதனை கூடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும், உணவு பொருட்களை அழுகாமல் பாதுகாக்க கதிர்வீச்சு தொழில்நுட்பம் கொண்டு வரப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்...

உணவு கண்காட்சி 2 (9)

**ஆசியாவின் முக்கிய உணவு கண்காட்சியாக திகழும் இந்தியாவின் இண்டஸ் ஃபுட் கண்காட்சியில், 20 -க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து உணவுத் துறை சார்ந்த அரங்குகளை அமைத்துள்ளன. சர்வதேச அளவில் புகழ்பெற்ற 35 சமையல் கலை நிபுணர்களும், இந்தியாவைச் சேர்ந்த சுமார் 100 சமையல் கலைஞர்களும்,இதில் அடங்குவர். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கிலான வர்த்தகப் பிரதிநிதிகள், கண்காட்சியை பார்வையிடுகின்றனர். கண்காட்சியின் ஒருபகுதியாக, உணவு உற்பத்தி மற்றும் உணவு தொழில்நுட்பம் தொடர்பான 2 மெகா மாநாடுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

நாடாளுமன்ற குழு (10)

நாடாளுமன்ற உறுப்பினர் திரு பர்த்ருஹரி மகதாப் தலைமையில் இன்று புதுச்சேரி வந்திருந்த, **ஹிந்தி ஆட்சி மொழி பற்றிய நாடாளுமன்ற குழுவின் துணைக் குழுவினர்**, சென்னை மற்றும் புதுச்சேரியில் உள்ள பல்வேறு மத்திய அரசு அலுவலகங்களின் அதிகாரிகளுடன், மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினர். சுமார் 35 மத்திய அரசு அலுவலகங்களை சேர்ந்த அதிகாரிகள் இதில் கலந்து கொண்டு, தத்தம் அலுவலகங்களில் ஹிந்தி ஆட்சி மொழியின் அமலாக்கம் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினர். புதுச்சேரி ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் அலுவலகங்களில் **ஹிந்தி ஆட்சி மொழியின் அமலாக்கம்** குறித்து, நாடாளுமன்ற குழுவினர் மகிழ்ச்சி வெளியிட்டனர். தொடர்ந்து இக்குழுவினர், புதுச்சேரியில் இருந்து கொச்சி புறப்பட்டு சென்றனர்.

கைலாஷ்நாதன் 1(14)

இன்று, மலர்க் கண்காட்சியின் நிறைவு விழாவிற்காக ஏனாம் சென்றுள்ள புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன், மண்டல நிர்வாகி அலுவலகத்தில், கல்வி, சுகாதாரம், பொதுப்பணி, வேளாண்மை, மீன்வளம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார். வர்த்தகப் பேரவை உள்ளிட்ட அமைப்புளின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர், ஏனாமில் ரிவர் பீச் உள்ளிட்ட பல்வேறு இடங்களை அவர் பார்வையிட்டார்.

முன்னதாக, புதுச்சேரி ராஜ்நாவாசில், HMP வைரஸ் தாக்குதல் நிலவரங்கள் குறித்து, தலைமைச் செயலர் மற்றும் சுகாதரத் துறையின் மூத்த அதிகாரிகளுடன், துணை நிலை ஆளுநர், ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். ஏற்கனவே 30 ஆண்டுகளாக சமூகத்தில் நிலவிவரும்

வைரஸ்தான் இது என்பதால், மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றாலும், சீனாவில் HMP வைரஸ் தாக்குதல் அதிகரித்து இருப்பதால், புதுச்சேரியிலும் கண்காணிப்பு தீவிரமாக்கப் பட்டுள்ளதாக, அதிகாரிகள்

*கைலாஷ்நாதன் 2 (5)*

இக்கூட்டத்தில் தெரிவித்தனர். தீவிர அறிகுறிகளால் பாதிக்கப் பட்டவர்கள்-குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியவர்களின் உமிழ்நீர் மாதிரிகள் பரிசோதனைக்காக ஜிப்பருக்கு அனுப்பிவைக்கப் படும் என்றும், புதுச்சேரி இந்திராகாந்தி அரசு மருத்துவமனையில் இதற்கான வசதிகளை உருவாக்க, ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் தகவல் வெளியிடப்பட்டது.

*புதுச்சேரி அப□ரதம் (13)*

புதுச்சேரியில் 18 வயதிற்கு கீழே உள்ள சிறார்கள் வாகனம் ஓட்டினால் அவர்களின் பெற்றோருக்கு 3 மாத சிறை தண்டனையும், 25 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என போக்குவரத்து காவல் கண்காணிப்பாளர் திரு மோகன்குமார் எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் சம்பந்தப்பட்ட சிறார்கள் 25 வயது வரை ஓட்டுனர் உரிமம் பெற முடியாமல் தடுக்கவும் சட்டத்தில் இடம் இருப்பதால், 18 வயதிற்கு குறைவான சிறார்கள் மோட்டார் வாகனம் ஓட்டுவதை பெற்றோர்கள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்க கூடாது என்று அவர் கூறியுள்ளார். சிறார்கள் வாகனம் ஓட்டாமல், பெற்றோர் கண்காணித்தால் தான் சிறார்களால் விபத்து ஏற்படுவதை தடுக்க முடியும் என்றும், சிறார்கள் தேவையற்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும் இதனால் ஏதுவாகும் என்றும் திரு மோகன்குமார் கூறியுள்ளார். இதுகுறித்த போக்குவரத்து காவல் கண்காணிப்பாளரின் பேட்டியில் இருந்து, ஒரு பகுதி........

*கட்கரி (19)*

கடந்த 2024 ஆம் ஆண்டில் நாட்டில் சுமார் 1 லட்சத்து 80 ஆயிரம் பேர் சாலை விபத்துக்களில் உயிர் இழந்ததாகவும், இதில் 30 ஆயிரம் மரணங்களுக்கு, தலைகவசம் அணியாததே காரணம் என்றும், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். சாலைப் பாதுகாப்பு குறித்து அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் போக்குவரத்து அமைச்சர்களுடன் கூட்டம் ஒன்றை நடத்திய அவர் பின்னர் புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதை தெரிவித்தார். சாலை விபத்துக்களில் பலியானர்களில் சுமார் 66 சதவிகிதம் பேர், 18 வயது முதல் 34 வயதிற்கு உட்பட்டவர்கள்

என்றும், பள்ளி-கல்லூரிகளுக்கு அருகே நிகழ்ந்த விபத்துக்களால் சுமார் 10 ஆயிரம் குழந்தைகள் பலியாகி இருப்பதாகவும் அவர் கூறினார். சாலை விபத்துக்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு, பணமற்ற முறையில் சிகிச்சை அளிக்க புதிய திட்டம் தொடங்கப் பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இத் திட்டத்தின் கீழ், ஒன்றரை லட்சம் ரூபாய் வரை உள்ள மதிப்பில் சிகிச்சை அளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். நாடு முழுவதும் ஓட்டுனர் பயிற்சி பள்ளிகளை அமைக்க ஊக்கத் தொகையும், ஒருங்கிணைந்த, தானியங்கி வாகன சோதனை நிலையங்களை அமைக்க கூடுதல் ஊக்கத் தொகையும் வழங்கும் வகையிலான திட்டம் ஒன்றையும் அவர் அறிவித்தார்.

*வானிலை* (12)

வட தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளிலும், தென் கிழக்கு வங்கக்கடல் மற்றும் இந்திய பெருங்கடலின் பூமத்திய ரேகைப் பகுதிகளிலும் தலா ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று முதல் ஒரு வார காலத்திற்கு தமிழகத்திலும், புதுச்சேரி - காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை இருக்கலாம் என்றும், . வரும் 11 ஆம் தேதி தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இன்றும் நாளையும் பொதுவாக காலை வேளையில் பனி மூட்டம் காணப்படும் என்றும், நீலகிரி மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் இரவு நேரத்தில் உறை பனிக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.